உ

கடவுள் துணை.

# பலதுறைக்காரிகை.

இவை.

கறைக்கால்

## முத்துப்புலவர்

அவர்களால்

பிழையறப்பரிசோதித்து

புதுவை

பெருமாளையரவர்கள்

குவரன்மா அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

இதுவேண்டுபவர்கள் புதுவையிலும் காரைக்காலிலேயும் இதன்விலை அ௴(௬) ஆகப்பெத்துக்கொள்ளலாம்.

கடவுள்துணை.

# பலதுறைகாரிகை.

## காப்பு.

### விநாயகர்துதி.

### கட்டளைக்கலித்துறை.

ஒருகொம்பிருசெவி மும்மதநால்வாயுறுமைங்கரப்
பெருகாரிளம்பிறை கொன்றையுந்தும்பையும் பேணுமரன்
றருகாதலவிப்பலதுறைக்காரிகைதான்முற்றவே
யிருகாலகமதிநென்னுளமைய வெழில்பெறவே.

மாலுக்குநல்ல மருகன்குகன்கந்தன்வாழ்குமரன்
நாலுக்குநாயகன் போரூர்முருகனளினமலர்
காலுக்குத்தண்டைகருணைக்குத்தோத்திரங்கற்றதெல்லாம்
வேலுக்கபயமயில்வாகனத்திற்கு விண்ணப்பமே.

திருமாலழகர் ஸ்ரீரங்கநாதனைச்சேவைசெய்து
ஒருமாலுக்காயொருவண்டுவிட்டேனந்தவண்டதுபோய்
பெருமாளைச்சுத்தி வலமாகவந்தொரு தெண்டனிட்டு
ஒருமாலைக்காக வொன்பதுமாலை வரம்பெற்றதே.

மாரைத்துளைக்குதுமன்பதபாணங்கள்மங்கையரே
காதையடைக்குது கண்கள்சிவக்குதுகாமத்தினால்
மோகம்வருகுதுமேல்மூச்சுவாங்குதுமெல்லியரே
தாகமெடுத்துத்தயங்குதையோ மனந்தார்குழலே (௧)

பால்போல்நிலவைமறைக்குதடாவவள்பந்துமுலை
மேலேறிக்கச்சுதெறிக்குதடாவல்குல்வெள்ளம்வந்து
காலால்பெருகிவழியுதடாயெந்தன்காமரசம்
ஆறுப்பெருகுதடாஐயையோஇவ்வரம்பையர்க்கே (௨)

தையோகமானவிழியாளைத்தேடித்தயங்கிமனம்
ஐயோஐயோவென்றலையுதடி அடிஆரணங்கே
கையால்தழுவியிருவருங்கூடிக்கலந்தசுகம்
செய்யாயுருகுதடி அன்னமேயுன்னைநினைந்திடவே. (௩)

நீச்சத்தடங்கொண்டண்ணாமலைநாதர்நெடுந்தெருவில்
தேர்ச்சததயிற்கொண்டுபோறபெண்ணேதயிரோதுவிலை

வீச்சுக்கலசங்கள் மேலேயிருக்கும்விலையறியேன்
பூச்சுகலசங்கள்ரெண்டும்ரெண்டாயிரம்பொன்பெறுமே. (ச)

கன்னனுருக்கியவெண்கலம்போலின்றுகாயுநிலா
யென்னாளுமிப்படிகாய்வதுண்டோவடியேந்திழையே
முன்னாலொருவனைமோசஞ்செய்தாயென்றுமொய்குழலே
கிண்ணாரங்கொட்டியஸ்தனபாரக்கச்சுகிழிந்திட்டதே (ரு)

அக்காண்டியக்கையணிவாண்டியாடையவிழ்க்கச்சற்றும்
வெக்காண்டிவெள்ளிமலையிருப்பாண்டியென்வீட்டில்வரச்
சிக்காண்டியேங்கித்திரிவாண்டிமுப்புரந்தீயெரித்த
சொக்காண்டிநாளைவருவாண்டிவேண்டியென்றோகையரே (சு)

அம்பளவெவ்வளவவ்வளவேவிழியார்ந்தகொவ்வைச்
செம்பளவெவ்வளவவ்வளவேயிதழ் சீர்கொள்வஞ்சிக்
கொம்பளவெவ்வளவவ்வளவேயிடைகூறெனுமிச்
சம்பளவெவ்வளவவ்வளவேஸ்தனந்தையலுக்கே (எ)

தளம்பளமவ்வளவாம்பேதைபெதும்பையர்தந்தனந்தூ
தளம்பளமவ்வளவாமங்கைமடந்தையர்தந்தனமா
தளம்பளமவ்வளவாமரிவைதெரிவையர்தந்தனஞ்சீ
தளம்பளமவ்வளவாமுலைபேரிளந்தையலுக்கே. (அ)

மார்க்கட்டருதபருவமடாயிளம்வஞ்சிக்கொடி
பூர்க்கட்டடாமதம்பொங்கட்டடாமதம்பொங்கிபொங்கி
வேர்க்கட்டடாதனபாரமிரண்டும்வெளியிலெட்டிப்
பார்க்கட்டடாநீபொறுடாபராக்ரமபாண்டியனே (கூ)

செருக்கட்டடாமதம்பொங்கட்டடாவந்தசித்தசனார்
கருக்கட்டடாமலர்காணட்டடாவன்றுகற்றவித்தை
யிருக்கட்டடாவின்னம்பக்குவமானவிளமுலையும்
பருக்கட்டடாநீபொரடாபராக்கிரமபாண்டியனே (ய)

அடடாயிதுநல்லமான்கன்றடாவதிரூபமடா
படடாநெருக்கிப்படுத்துக்கொடாபல்லினுர்க்கடித்து
விடடாவொருதரம்விட்டுககொடாயிதுதான்சமயம்
தொடடாகலவிதொடுத்துக்கொடாமுத்துத்துரைசிங்கமே (கக)

அடடாமதன்கணைகொல்லுதடாயிங்கணைத்துமுத்தந்
கொடடாவிதழைக்கடித்துக்கொக்கோகத்தின்லீலையைநீ

யெடடாவினியிறங்காதையடாபோகமிறங்கியபின்
விடடாகலவியைத்துரராஜரத்னவிபூஷணனே. (கஉ)

சின்னஞ்சிறுக்கிநற்சிற்றுடைக்காரிபொற்சிற்றிடைச்சி
அன்னநடையுடன்கைவீச்சென்றேபொறுமைம்பதுபொன்
வன்னமுலையும்வின்னெற்றித்திலதமுமார்பழகும்
இன்னம்பெரியர்விலைசொல்லவஞ்சுவரோந்திழைக்கே. (கங)

மடைகொன்றைசூழ்வயற்றென்குருகேயடிவஞ்சியேயுள்
ளிடைகண்டவர்க்குப்பரலோகமுண்டுன்னிரண்டுவிழிக்
கடைகண்டவர்க்குக்கயிலாயமுண்டுகதலியடித்
துடைகண்டவர்க்குத்தேவேந்திரபோகமுந்தோன்றுமே. (கச)

தில்லைவன் கூற்று
காத்திருந்தாலுங்கலிதீருமேகண்ணூட்டிமுகம்
பாத்திருந்தாலும்பசிதீருமேயிடப்பாகமதில்
வீற்றிருந்தாலும்வினைதீருமேமெல்லிமென்றனத்திற்
சேர்த்தணைந்தாலுஞ்சிவயோகஞானமுஞ்சித்திக்குமே. (கரு)

தில்லைவி கூற்று
பிடித்தானிருதனஞ்சேரத்தழுவிப்பிசைந்துமவன்
கடித்தானிதழைகற்கண்டுசீனிகலந்தமுர்தங்
குடித்தான்வலிதனைக்கொள்ளைகொண்டானற்குமரிமகள்
முடித்தான்கலவிநடந்தான்றன்னூர்க்குமுருகனுமே. (கசு)

கொங்கைச் சிறப்பு
தாளத்தனத்தியதிமோகவல்லிநற்சர்க்கரைப்பெண்
வாளொத்தவேல்விழியுள்ளவள்காணவள்மார்பின்முலை
ஆளைத்துரத்தியெதிர்த்தோனைக்குத்தியதட்டிநின்று
மீளத்திரும்பியிளைஞோனைப்பார்த்துமிரட்டியதே. (கஎ)

கன்னங்கருங்குயில்வல்லிதன்மார்பிற்கதித்தெழுந்த
தென்னங்குரும்பையின்சாயல்கண்டீர்திரண்டோடிவிம்மி
பொன்னங்கலசங்கள்போலேயிருந்தனநற்பூந்தனங்கள்
இன்னந்தளர்ந்திடுமென்றேமனங்கிடந்தேங்கியதே. (கஅ)

மங்காதகீர்த்தியன்றொண்டவராயமகிபன்வெற்பில்
சங்கீதவல்லியைமார்போடணைத்துச்சரசஞ்செய்து
இங்கிதமாகயிருவருங்கூடியிருக்கையிலே
பொங்கோதவாரியின்மீதேநிலவுபுறப்பட்டதே. (ககூ)

ஆருருஞ்செஞ்சடையம்பலவாணரணிவரைமேல்
நீராடிப்போகின்றநேரிழையேயந்திநேரத்திலே

சேருடிக்குங்குமக்கொங்கையைக்காட்டிச்சிரித்தொருபெண்
போருள்பிடிபிடியென்றேஙிலவுபுறப்பட்டதே. (உ௰)

சித்தமகிழ்ந்துவருஞ்சொக்கநாதர்செழுங்கிரிமேல்
மெத்தைவிரித்ததின்மேலேயிருவருமேவிச்செவ்வாய்
முத்தங்கொடுத்துமுகத்தோடணைத்துமுலைகடித்து
சித்தமுங்கொஞ்சிவிளையாடநல்லநிலவிதுவே. (உக)

கொன்றையுந்தும்பையும்வாகையுஞ்சூடிக்கொழுமலைமான்
கன்றையுமேந்தியவம்பலவாணர்கனகிரிமேல்
பெண்ணையெடுத்துமடிமீதில்வைத்தொருபோகஞ்செய்து
நன்னயம்பேசிவிளையாடநல்லநிலவிதுவே. (உஉ)

கொத்தோடுமாங்கனிசெந்தேனொழுகுங்குவலயத்தில்
சித்தினிபெண்டனமண்ணுந்துவிம்மிச்செறிந்திலகு
முத்தணிகொங்கையைமுன்பே லவேகைமுகந்தணைய
எத்தனைநாள்செல்லுமோவறியேனென்றனேழைநெஞ்சே. (உங)

நரிக்குப்பொருளையுபதேசம்பண்ணிநரிகளைப்பின்
பரிக்குச்சரிந்தவம்பலவாணர்பனிவரைமேல்
முருக்கிச்சிவந்தவிதழ்தனையுண்டுமுலைகள்ரண்டும்
நெருக்கிப்பிடித்துவிளையாடநல்லநிலவிதுவே. (உச)

மாலேமிகரொத்தசந்திரவாணன்வரையிடத்தே
பாலேறிப்பாய்ந்திடத்தேன்மாரிபெய்யனற்பாகுகற்கண்
டாலேயெருவிழமும்பழச்சேற்றினமிர்தவயன்
மேலேமுளைத்தகரும்போவிம்மாதுக்குமெய்யெங்குமே. (உரு)

தருமிகரானசரபோஜராசன்றடம்பொழிலார்
பெருவயனூடுதனிலெனைப்போலோர்பிடாரனுண்டோ
வொருகுடமேந்தியொருபாம்பையாட்டுவதுலகவித்லை
இருகுடந்தொட்டரைப்பாம்பினையாட்டுவதென்வித்தையே (உசா)

காலப்புயலனையான்கருமாணிக்கன்கற்பன்வெற்பில்
வலக்கருங்குழலாள்தருமோகமென்னளவோ
மாலுக்குமாரளவாய்மலரோனுக்குவாயளவாய்
ஆலத்தையுண்டவர்க்கேதலைமேனின்றுலாவியதே. (உஎ)

காரைப்பழித்தகையான்கருமாணிக்கன்கற்பன்வெற்பில்
ஆரைச்சுடாதிந்தகாமச்செந்தியதனலல்லவோ

வாரிக்குண்மாயனொளித்தானயனுமலர்ப்புகுந்தா
நீரைச்சுமந்துநின்றான்கொன்றைசூடியசின்மலனே. (௨௮)

தடந்திசையெட்டுமகமேருவெற்பையுந்தாண்டியப்பால்
கடந்தபெரும்புகழான்கருமாணிக்கன்கற்பெண்வெற்பில்
அடர்ந்துபடர்ந்தகுவிமுலையாள்தந்தவாசையின்னம்
படர்ந்துபடர்ந்துகொழுந்தோடுதென்மணப்பந்தலிலே. (௨௯)

நாடாதுநாடினையோநலங்கல்விநயமிலர்பால்
ஊடாடிநெஞ்சந்தளர்ந்தனையோவென்னலரையெல்லாங்
காடாளவைத்தவன்மால்சருமாணிக்கன்கற்பன்வெற்பில்
வாடாமல்வாடினதேன்மன்னவாவுன்மதிமுகமே. (௩௰)

நெஞ்சிரம்வற்றியுள்வாய்வரண்டுநினைவுதப்பி
எஞ்சிவனும்விட்டுப்போகுதையோவிளமாமயிலே
வஞ்சிக்கொடியிடைப்பெண்ணாள்குமுதத்தின்வாயமுர்தச்
சஞ்சீவிகொண்டுவந்தால்பிழைப்பேனினிச்சாவில்லையே. (௩௧)

சிரானவேதபுரிநாதர்கோயிற்றிருக்குளத்தில்
நீராடிப்போகின்றநேரிழையேயென்றனெஞ்சுவிடாய்
தீராமலாம்பற்செவ்வாய்திறவாமற்றிரும்பிமுகம்
பாராமற்போகின்றதாலேகிடைக்கும்பழியுனக்கே. (௩௨)

சேன்மிஞ்சிப்பாயும்வயற்காஞ்சியூரான்செருக்களத்தில்
மேன்மிஞ்சுமையம்பெருமான்மகிபன்வியன்சிலம்பில்
மான்மிஞ்சியான்சொன்னவார்த்தையுமிஞ்சித்தன்மட்டுமிஞ்சிக்
கான்மிஞ்சிக்காரன்பின்போனாளெனைவிட்டுக்கைமிஞ்சியே. (௩௩)

கொத்தடிபாய்ச்சதங்கையுந்தண்டையுங்கொஞ்சிக்கொஞ்சிச்
சித்தடிவைத்துவருமையனேசெகத்தோர்புகழும்
சுத்தச்சுரும்பனைச்சுந்தரஞானச்சுகுணனையே
எத்தியழைத்துவந்தாற்றருவேன்முலையின்னமுமே. (௩௪)

கூரிட்டவேல்விழிமாதரசேயுன்றன்கோபமெல்லாம்
யாரிட்டவஞ்சனையோவறியேனடியாரிழையே
ஏறிட்டிங்கென்முகம்பாராமனீயுமிருப்பதினாற்
கோறிட்டுஞாயத்தைச்சொல்லுவன்பாரடிகோதையரோ. (௩௫)

மறக்கப்படுதில்லைகாசியில்வாழிளவஞ்சியைவிட்
டுறக்கம்வருதில்லையூணில்லையானந்தலூர்குறித்துப்

பறக்கவென்றாலுஞ்சிறகில்லைபஞ்சபாணனம்பு
பொறுக்கப்படுதில்லையெள்ளேவண்டேசொல்லும்பூவையர்க்கே.

ஆற்றுமணலுக்கும்பால்போல்நிலவுக்குமாருந்தென்றற்
காற்றுக்குமீப்புகழ்காளத்திநாதனைக்கண்டுமையல்
போற்றிமுலையினைக்கையாற்பிடித்துநற்போகஞ்செய்ய
சாற்றுமின்னுள்விடவேறில்லையென்றுனாதார்குழலே, (௫௭)

கேளாயிப்போதுதணலாற்றுகைக்குக்கிணறுகெல்ல
நாளாகச்சொன்னகதையொக்குமேநண்ணலனைவென்ற
வேளாளதீபன்களப்பாளனுத்தண்டன்மென்சிலம்பில்
வாளாருங்கண்ணிமணஞ்செய்துகூடென்றவாசகமே. (௫௮)

ஆய்க்குஞ்சடாட்சரமில்லாதநாவுக்குமன்னையற்ற
சேய்க்கும்பசியற்றநேரத்திலூணுக்குஞ்சீவித்தின்று
பாய்க்கும்பெண்பாலற்றநித்திரைக்கும்புதுப்பானைபுகு
மீய்க்குஞ்சுகமுமுண்டோவெள்ளைநாவலிருப்பவனே. (௫௯)

எறிக்குமதிச்சடையண்ணாமலையபொழிற்கிரியில்
பறிக்கின்றபூவைமிதிக்கப்பொருளந்தபாதத்தினுல்
பொறிக்கண்பிசாசுகணைற்களைத்தூவிப்பொறிபொறித்துக்
கொறிக்கின்றபாலையிலெப்படிப்போயினள்கோமளமே. (௬௰)

சற்றேசரிந்ததனமேயசையதரளமணி
மூத்தேகுலுங்ககுழலூசலாட முருக்கிதழ்வாய்,
நற்றேனெழுகநடனவுல்லாசநடையழகிப்
போற்றேரிருக்கத்தலையலங்காரம்புறப்பட்டதே. (௬௧)

நடந்தாள்பயிலுந்துறைராசகேசரிநாட்டிற்கொங்கைக்
குடந்தானசையும்வொயிலானதுகண்டுகொற்றவர்பின்
தொடர்ந்தார்சந்பாசிகள்யோகம்விட்டார்சுத்தசைவரெல்லாம்
மடந்தானடைத்துச்சிவபூசையுங்கட்டிவைத்தனரே, (௬௨)

நாலாகலைதெரியேகம்பவாணர்நன்னாட்டில்வளர்
சேலாகக்கண்கள்படைத்தமின்னேயுன்றிருவயறு
ஆலாகவுமல்குற்பாம்பாகவுமவ்வணையின்மிசை
மாலாகயான்பள்ளிகொள்ளவந்தேனுன்றன்மாளிகைக்கே. (௬௩)

என்றுதிரும்பிவருவீரெனத்துயிலேந்திழையாள்
நின்றுமயிரொருகையாலொதுக்கிவெண்ணீறுதந்து

குன்றுநிகர்கொங்கைமீதேயணைத்துக்கொடுத்தவிடை
யொன்றைநினைத்தல்லவோவென்றனங்கமுறுத்தியதே. (சச)

அற்புதமானகொடியாளரசியணிவளைமேல்
பொற்கொடியேவிட்டுயெப்படிபோவதுபோகவென்றால்
நெற்கடைதூரமொருகாலைதூக்கிநிலத்தில்வைக்க
விற்கடைதூரமிழுக்குதென்னாசைவிதிவசமே. (சரு)

கனம்பிரிந்தாலுமின்வான்பிரிந்தாலுங்கதிர்புனல்விட்
டனம்பிரிந்தாலும்புயல்போலுமேனியரம்புயமின்
றனம்பிரிந்தாலுந்தென்னாரூர்த்தியாகர்தமதடியார்
மனம்பிரிந்தாலுமுனைப்பிரியேனடிமாதங்கமே. (சசு)

விளையாடும்பாலனைநின்சாயல்கண்டொருமெல்லியவள்
வளையாடுஞ்செங்கையினாலெடுத்தாள்மகமேருவென்னுங்
கிளையாடர்முகிலாரூர்த்தியாகர்தங்கேழ்கிரிமேல்
இளையாளெனவறிந்தேனவள்பேரென்னியம்புவீரோ. (சஎ)

வண்டேகுழல்விட்டெழுந்திருக்கோளந்தவஞ்சியிடை
பண்டேயிருந்தனபாரம்பொறாதுபழிசுமக்கும்
விண்டேன்வயல்சூழ்தென்னாரூர்த்தியாகர்வியன்சிலம்பி
லுண்டோதடாகமும்வாவியுஞ்சோலையுங்களுக்கே. (சஅ)

ஏழையிடத்தவராரூர்த்தியாகரொழிற்சிலம்பில்
யாழைப்பழித்தமொழியணங்கேயடுபாலனமும்
வாழைவருக்கைக்கனியொடுபாற்குடம்வைத்திருக்கக்
கூழையெனக்களித்தாய்மறுமாற்றங்கொடுத்திடுமே. (சகூ)

வாழியிருந்திருவேநவநீதம்வரும்பொழுது
ஆழியுடைந்தசெயலொத்ததேதண்டரளச்சங்க
மேழியுடைத்திருவாரூர்த்தியாகர்வியன்சிலம்பிற்
கோழியிருந்துவிலக்கியவாறுகொழுநனையே. (ருய)

சோதிமறந்தசுரும்பினங்காளிந்தத்தோகையிடை
பாதியிறும்படிச்செய்கின்றதாலுமைப்பாவமுறும்
வீதிவிடங்கர்தென்னாரூர்த்தியாகர்வியன்சிலம்பி
லோதியிருந்துமறிவில்லையோசொல்லுமுங்களுக்கே. (ருக)

தேர்கொண்டகாமன்கவிகையும்வேழமுஞ்செஞ்சிலையும்
பேர்கொண்டவம்புங்குடமுங்கண்டேயொருபுற்றிடத்தில்
வேர்கொண்டிருப்பவராரூர்வீதிவிடங்கர்வெற்பில்
கார்கொண்டகாவிலொருபசுந்தோகையென்கண்ணுற்றதே. (ருஉ)

அன்றுகண்டோநஞ்சமுதத்தையாழியிலம்புயமால்
சென்றுகண்டேத்துந்தென்னாரூர்த்தியாகர்திருமிடற்றி

லொன்றுகண்டோமற்றங்கொன்றுவிண்ணுடருலகிற்கண்டோ
மின்றுகண்டோமனங்காமிவட்பார்வையிரண்டினுமே. (௫௩)

வெம்போதகவுரியாரூர்த்தியாகர்விடங்கர்வெற்பில்
செம்போதசத்துத்திருவனையிருங்கள்செங்கையினல்
அம்போதிதன்னையடைக்கியநீர்வெற்படக்கிலும்மை
கும்போதயமுனியென்றேத்துமிந்தக்குவலயமே. (௫௪)

வலஸ்திரிபோற்றியவாரூர்த்தியாகர்மணிவரைமேல்
நலஸ்திரிபாலைக்குளெவ்வாறுசென்றனள்நாயகனைப்
பலஸ்திரிவிட்டிற்குப்போகையிலேவழிபார்த்திருந்த
குலஸ்திரிதன்மனம்போலேயெரியுங்கொடுஞ்சுரமே. (௫௫)

அடக்கேன்விரகமறியேன்சமயமாய்ந்துசற்றும்
படுக்கேனொருவரைப்பாரேனிரவுபகல்முழுதும்
எடுக்கேன்மலரைமுடிக்கறியேனும்மையேநினைந்து
வடக்கேவழியையும்பார்த்திருந்தேன்கண்ணுமாசுற்றதே. (௫௬)

ஏட்டாலெழுதமுடியாதுயான்கொண்டவின்பமதைக்
கேட்டாலொருவர்செவிக்கடங்காதுகிளர்புனத்திற்
கோட்டானைமுன்குத்தக்கொம்பானைபின்குத்தக்கோதைசிறை
மீட்டானைமேவியகையோபிறர்த்தனமேவியதே. (௫௭)

போர்முந்துமோகனவல்லாளிசுந்தரன்பூவைக்கிந்தத்
தேர்முந்துமோதன்றேர்முந்துமோவிருதேர்முந்துமுன்
கார்முந்துமோவதுமுந்துமுன்னேயிருகண்கள்சொரி
நீர்முந்துமோவறியேன்வலவாவென்றனேரிக்கே. (௫௮)

நாகத்துவசனசனத்தினஞ்சிடநாரணர்தந்
தேகத்திலோர்மயிர்வீழ்ந்திடப்பாண்டவர்சீவனுற்றார்
வாடுத்தகூந்தலென்மேலேபுரளவிவ்வையகத்தில்
ஆகததுணைமுலையீரழியாதென்றனுருயிரே. (௫௯)

விழிமேல்மனமுமனமேல்மயலும்வளைந்தமணற்
சுழிமேல்விரலும்விரன்மேற்றுளியுமென்சோகமெலாங்
கழிமேலிருக்குங்குருகினங்காள்சென்றகாதலர்க்குப்
பழிமேற்சுமக்குமென்றேசொல்லுவீரந்தப்பாதகர்க்கே. (௬௰)

நீவந்தெனக்குமுன்னேநின்றமாயமுநீதயைபோ
டாவந்தவாயமும்யாதுக்கொலோவன்றுநூற்றவர்பாற்
போய்வந்தநேமிப்பெருமாளரங்கர்பொருப்பிடத்தே
வேய்வந்ததோளிர்க்கென்சொல்லினுள்சொல்லும்வேலவனே. ()

நானஞ்செறிபுயற்காளத்திநாதர்தன்னுட்டினிலே
கானஞ்செறிகுழற்காரிகையாரிருகண்ணினுக்கு

மானஞ்சுமம்பஞ்சுமாவஞ்சும்வண்டுஞ் சும்வாரியஞ்சு
மீனஞ்சுநஞ்சஞ்சும்வேளஞ்சும்வாளஞ்சும்வேலஞ்சுமே. (௬௨)

கொக்கேறிவந்தவரசேயிருவருங்கூடவென்றூற்
கொக்கேகணவனுங்காவல்வைத்தானந்தக்சொக்கெழுந்தாற்
கொக்கோடித்திடுகவேங்வேபருதறுக்கொல்லையிலே
கொக்கேயிருக்கின்றதங்ஙனம்வந்திடிற்கூடுவனே. (௬௩)

மாலோன்டதிசையயரன்பதிதேடிவரினுமழைக்
காலோதிவானினிறமேதரினங்கனகரத்தின்
வேலோங்குதிண்புயன்விக்கிரமச்சோழன்வியன்சிலம்பிற்
சேலோங்குங்கண்ணியையெந்நாளுங்காக்கத்திறனுனக்கே. (௬௪)

கணிமாதவர்புகழ்தென்கிரிக்காமக்கனகிரிமேற்
றுணிவாகியவெண்மதிநுதலீரொமைச்சூழ்ந்தமயார்
பிணியாற்றுதற்குங்களையாற்றுதற்கும்பிறகுசிந்தா
மணியாத்திரையல்லவோவஞ்சியீர்கொஞ்சும்வாயிதழே. (௬௫)

ஊழிக்கருங்கங்குனிக்கிவெயயோனையிங்குள்ளழைக்குங்
கோழிக்குலத்தைவளர்த்தலாற்கொடுங்காவிமள்ளர்
மேழித்தமிழ்மணக்கும்நல்லநாதன்வியன்சிலம்பிற்
பாவிக்குயான்வளர்த்தேன்கிள்ளையேயன்னம்பால்பகிர்ந்தே. (௬௬)

மாலடிதேடியுங்காணுதசொக்கர்வரையிடத்தே
பாலடிதேடிவருங்கிள்ளைகாள்ஒருபாவையென்னை
வேலெடுத்தேதுத்திவேயிணைக்கேகட்டிமேருவின்கீழ்
ஆலடிக்கீழ்வெளிக்கேமறைத்தாளென்றனுருயிரே. (௬௭)

குறித்தாள்குறித்தொன்றைக்கூறப்படாதென்றுகொய்தழையைப்
பறித்தாள்பறித்துப்பவளச்செவ்வாய்வைத்துப்பையப்பையக்
கறித்தாள்கறித்தபின்கண்டம்புகாதென்றுகாந்தளங்கை
முறித்தாள்முறித்தபின்னேநினைத்தாளவர்மொய்ம்புனையே. (௬௮)

பாசத்தினையறுத்தாண்டுகொண்டோன்றில்லையம்பதிசூழ்
தேசத்தனேசெம்மனிந்ததைச்சென்றியான்கொடுத்தேன்
பேசப்பெருகுஞ்சுருங்குமருங்குலும்போர்ந்தனைந்துப்
பூசித்தலன்றிச்செய்யாதனவில்லையப்பூந்தழையே. (௬௯)

கராமேலிடுபுயன்காளத்திநாதன்கனகவெற்பில்
இராமேசுரத்தினுக்கேகுவ்வெனென்றனளேழைபுத்தி
வராமேசுயபுத்திவந்துதென்றேகனிவாய்மலர்ந்தென்
அராமேவியவல்குலாள்சொன்னசூதையறிந்திலனே. (௭௰)

வாரிக்கிராகவன்மாரனுக்கீசன்மதிக்குத்தென்றற்
றேருக்குப்புந்தள்மருவார்க்குநாதனுஞ்சென்றவர்க்குத்

தாருக்குநேரொக்கத்தானஞ்செய்தாண்டவன்றன்சிலம்பிற்
பூரிக்கும்பெண்ணிற்குச்சஞ்சீவிநீதந்தபூந்தழையே. (௭௧)

தண்டமிழ்கேசரன்மாவலிவாணன்றடங்கிரிமேல்
வண்டெழுபாலைக்குளெவ்வாறுசென்றனள்மாநிலத்திற்
கொண்டபெண்ணனவள்வேறேயொருவனைககூட்டிவாக்
கண்டவன்றன்மனம்போலவெரியுங்கடுஞ்சுரமே. (௭௨)

எட்டியுந்தீய்ந்துவிடத்தேருங்கள்ளியுமீரம்வற்றிப்
பொட்டிப்பொரியெழும்பாலையிலேபுரிவார்குடலை
வெட்டிச்செயங்கொண்டவிக்கிரமச்சோழன்வியன்சிலம்பிற்
கட்டித்திரவியமெப்படிபாடகக்கால்வைப்பவளே. (௭௩)

காராளதீபன்களப்பாளனுத்தண்டன்கார்த்தநதையூர்
நீரார்முகிற்குழற்பெண்பேதையேவிட்டுநீர்பிரிந்தாற்
சீரார்மனில்லையமுதில்லையஞ்சனைச்செல்வனில்லை
காவார்பொழில்வளர்காழிப்பிரானில்லைகாத்தருளே. (௭௪)

காயுங்கடுஞ்சுரமீதென்றுகாட்டியகையுஞ்சொன்ன
வாயும்புகையெழும்பாலையிலேமருவார்சிரத்தைத்
தோயுந்தமிழுடையான்சுந்தரபாண்டியன்றொல்புவியிற்
றூயுந்தமரிலளெவ்வாறுசென்றனள்தார்குழலே. (௭௫)

காண்டாவனஞ்செறிபாலையுள்ளேசென்றகாளையிங்கே
மீண்டாலணங்கோரடிசெல்லுமோவென்விதிவசமோ
ஆண்டார்களந்தைப்புருவேயதிசயமன்றனுமன்
றூண்டாதொழுங்கதிரோன்முன்புபோகின்றகுட்சியதே. (௭௬)

மாக்கண்வடுக்கணிசெண்பகநாதன்வரையிடத்தே
பூக்களெடுக்கப்பொறிவண்டுகூவப்புள்ளிமான்கதற
மூக்கைவழித்தேயழுதகண்ணீராமுகந்தபுலி
நாக்கைநனைக்கச்சுரத்திலெவ்வாறுநடந்தனளே. (௭௭)

மத்தக்கரிமுகயானையையீன்றருள்மாதுபங்கன்
அத்தன்கறைமிடற்றண்ணல்தந்நாட்டிலதிசயங்கேள்
எத்திசையும்புகழ்மதுராபுரிவளரேந்திழையாள்
செத்தகுரங்கைத்தலைமேற்சுமந்துதிரிந்தனளே. (௭௮)

அத்தருமாலுமயன்றேவருமிகவன்புடனே
நித்தமும்போற்றுந்திருத்தணிவேலர்நிகழ்வரையிற்
பெற்றசுதனுடன்றான்கூடமாண்டிடும்பெண்முடிமேற்
செற்றிடும்வானரந்தான்வந்தமர்ந்ததுசேயிழையே. (௭௯)

மாலயன்தோற்றுமதுராபுரிச்சொக்கர்வரையிடத்தே
சோலைவரிக்கிளிக்கின்னமுதூட்டச்சுடச்சுடவப்

பாலையெனக்குத்தருதியென்றேனன்று பாளையென்றேன்
ஆலைமொழிச்சிறியாள்சொன்னகுறையறிந்திலனே. (௮௰)

விழுதுவிட்டோடியகுத்தாலநாதர்வியன்சிலம்பிற்
பழுதுபட்டாவி தைக்குந்தையோபஞ்சபாதகனைத்
தொழுதுவிட்டேன் வரச்சொல்லிவிட்டேன் வரச்சொல்லிச்சொல்லி
யெழுதிவிட்டேனன்னமேயினிவோலைக்கிட மில்லையே. (௮௧)

உழுமேழியாளன்களப்பாளனுத்தண்டனோங்குவெற்பில்
எழுமேகமுஞ்செலுமேவலவாவென்னத்தேடிமயில்
அழுமேதெருநிற்குமேயஞ்சுமேகெஞ்சியப்பனைமேல்
விழுமேமரித்தெழுமேமீண்டநாளைவிரவெண்ணுமே (௮௨)

திரைவேலைசுற்றியகுத்தாலனாதர்தினம்பவனி
வரவேலைநீயுமயல்கொளவேலையம்மாரனம்பு
பொரவேலைநீசங்கம்போட்டிடவேலைபுதியவளைத்
தரவேலையாகுமகளேயுனைப்பெற்றதாலிங்ஙனே (௮௩)

வானைத்தரும்புகழ்காளத்திநாதனூர்மன்னன்வரின்
கானைக்குழலிசிற் றற்றலைபூட்டிக்கண்வேலதனால்
ஊனப்படக்குத்தியல்குல்பொற்றேரைறவிட்டேர்ந்துகொங்கை
யானைக்கிரையிடுவேனொருநாள்வத்தகப்படிலே (௮௪)

பொய்யாதவாசகன்சங்கரநாராணன்பூபனிரு
கையலைமையக்கனவுகண்டேன்முலைக்காம்பினைகந்
தையாதனையுமெனவுணாத்தேனதிற்சண்டைவந்து
மெய்யோவெனவிழித்தேனொளித்தானென்விழியினுள்ளே. (௮௫)

துளவத்தணியுஞ்சங்கரநாராணன்றோய்ந்தனைந்த
களவத்தனையுமிதழ்சொல்லுமேதயடிகள்ளிநந்தம்
வளவத்தனையுமிதுவார்த்தையாச்சுதுவன்முலைப்பாக்
களவத்தனையில்லையேயுனக்கேனிந்தக்காயக்கமே. (௮௬)

போவென்றிரவைச்சிறகாலடித்துப்பொழுதையிங்கே
காவென்றழைப்பதற்கோவளர்த்தேன்வானச்சேவலைநான்
காவென்றவர்க்குத்தருமுருகைபன்றடன்சிலம்பில்
ஆவென்றவாய்கிழிப்பேன்பொழுத்தேன்வளர்ததாசைகொண்டே ( )

வெள்ளியங்கார்வனையான்புலிநாதன்வியன்சிலம்பிற்
கள்ளியங்காடுசென்றும்மகளேயுன்கருத்தறிந்து

பள்ளியிங்கார்படுப்பாய்பனிநீரையுள்பஞ்சணைமேல்
அள்ளியிங்கார்தெளிப்பாரென்னைப்போலுன்னருகிருந்தே (௮௮)

மன்னனில்லாதவிவ்வாசல்வந்தாய்மதியேயுனையுஞ்
சின்னக்குதிரைமரத்திளிற்கூவுஞ்சிறுகுயிலுங்
கன்னற்சிலையைப்பிடித்தோனையுமேகாணவந்தால்
வின்னப்படுத்தியென்வாசல்வராமல்விரட்டுவனே. (௮௯)

மதியேயென்பாங்கிதன்வாசல்செலாதேநான்வருமளவுஞ்
சதியேநினைத்தங்குதான்போனவையேர்க்குயிற்றான்றனிக்குங்
கதியேமிகுத்தனற்கன்னற்கதிபன்கணைதொடுப்பான்
பதியேபுகர்திருசென்றூற்பசைவரும்பாவைக்குமே. (௯௰)

தேவெனவேந்தர்பணிமுருகையன்றன்றென்சிலம்பில்
ஓவெனத்தேறிப்பிறிவுசொல்வேனொருநாளிரவிற்
காவெனவன்றிற்பெடைகூவரற்றிடக்கைநெகிழ்முன்
ஆவெனமட்டுமுயிர்நிற்குமோவந்தகாரிகைக்கே (௯௧)

பகரப்பகரவரிக்கீற்றயலைப்பகர்வதல்லால்
வகரக்கயலைமறந்தனளேமகமேருவென்னுஞ்
சிகரப்பெருஞ்சிலைக்காளத்திநாதர்செழுஞ்சிலம்பிற்
றகரப்பெருங்குழலாட்கில்லையேநெஞ்சிற்றண்ணளியே (௯௨)

மதிசூடியதில்லையம்பலவாணன்வரையிடத்தே
அதிசயமானவோரற்புதங்கேளரன்வீதிவரத்
துதிசெய்துமூவெட்டுத் தும்பியுங்கொண்டுதுவண்டொருபெண்
ணெதிர்நின்றிரண்டுமொங்கரத்தேபிடித்தேந்தினளே (௯௩)

ஓராறுநாகவயிரங்கரத்திலொளிபுபெற
வீராறுராசியின்முன்பானராசிகலசத்தின்மேல்
மூவாறுவாறுபோன்பெற்றிடுசேலைமூன்றூனைகொண்டு
நாலாறுயானையைக்கைக்கொண்டுவீசிநடந்தனளே. (௯௪)

பெரும்பாரளந்தவரோயரனேந்தும்பெரியவரே
யரும்பாலரணையாதவரோயெமதண்ணலெனும்
விரும்பினர்காத்திடுங்காளத்திநாதர்வியன்சிலம்பிற்
கரும்பாமொழிசசியர்மேலனுத்தேநிற்குங்கவலரோ. (௯௫)

அலைகுளப்பாட்டுஞ்சலராசியேழுமடங்கவுண்டு
மலைக்குளப்பாட்டவருங் கொண்டல்காள் தெவ்வர்மார்பில் வைமேற்
குலைகுளப்பாட்டுங்குலசேகரன்வெற்பிற்கேதைகண்ணீர்
முலைகுளப்பாட்டவன்றேவெம்மைநீர்விட்டுமுந்துவதே. (௯௬)

திருத்தேர்புகழ்நந்திதேசபண்டாரிதெள்ளார்வெற்பில்
பருத்தேர்குழலைக்குக்காமுந்துமாகில்மகுடரத்நப்

பரித்தேரும்பாகனும்மென்பட்டவோவென்றுபங்கயக்கை
நெரித்தேவயிற்றில்வைத்தேசிற்பளேவஞ்சிநெஞ்சுலர்ந்தே (௧௭)

வாணுத்தகையன்முருகப்பபூபன்வரும்பவனித்
தேனத்தைக்கொண்டுதிரிந்தனையேயடியேமகளே
நீனத்தைப்போடவுநானத்தைத்தேடநிதநிதமுஞ்
சீனத்துக்கப்பலுளதோமகளேயுனக்குத்தெரிந்திலையே (௧௮)

இலங்கேசனைவென்றமால்வேங்கடேசுரெட்டன்முன்னே
நிலங்கேசனைக்கண்டொதுங்குனைப்பார்த்திடினீயெதிரோ
துலங்கேசனைச்செய்தசன்னையெல்லாஞ்சொல்லுசுற்றீயசை
வலங்கேசனையுமிடைதுரும்பாருமடக்கொடிக்கே. (௧௯)

தலைவாசனிற்பவள்தலைமயிர்கோதுவள்தையனல்லாள்
முலைமார்பைக்காட்டுவள்வாவென்றழைப்பவள்முன்புவரிற்
கலைதானெகிழ்ப்பவள்கைப்பொருள்கேழ்ப்பவள்காசிலையேல்
தலைதான்வலிக்குதுபோபோவென்றேசியேதள்ளுவளே. (௨௰)

கட்டாரியேந்தியகாளத்திநாதர்கனகவெற்பிற்
பொட்டானனமிட்டுப் போறபெண்ணே யென்றன்பொற்கொடியே
தொட்டால்மணக்கும்புனுகுசவ்வாதுகஸ்தூரியுடன்
தட்டானடிந்தசிமிழ்போற்றனங்களைத்தருகுவையே. (௨௰௧)

சேலுங்கலையுஞ்சிலையம்பும்வண்டுஞ்செழித்தவொரு
வேலும்பழித்தவிம்மெல்லியளெய்தவிழியம்பினால்
மாலுளவாகிமயங்கித்தயங்கத்தயங்கமதிதினந்தன்
பாலுளவேலைவிட்டெய்தேன்மருந்தென்னபைங்கிளியே. (௨௰௨)

பைங்கிளியென்றிடுமாதேவிழியம்புபட்டவர்க்குக்
கொங்கையிணைத்தடந்தவள்வாய்மருந்தேகொடுத்து
சங்கையில்லாமதின்பொற்றேர்கடிதடஞ்சாரவைத்தாற்
பங்கமிற்காமவியநோய்தணித்திடும்பாரமன்றே. (௨௰௩)

மையிட்டகூந்தலுமானிட்டகண்ணுமதிமுகமுங்
கையிட்டகிள்ளையும்வாரிட்டகொங்கையுங்காதினிற்பொன்
செய்திட்டவோலையுஞ்சுற்றடியிட்டசெழுஞ்சிலம்புங்
கைதிட்டமக்கவருபவளேயெனைக்காண்கிலையே. (௨௰௪)

காண்கிலையென்றிடுங்காமனையொத்தகனவழகா
ஆணரசேயெனைக்காணவருபவராயிரம்பொன்

வேணமட்டுங்கொணர்ந்தீகுவர்நீயுமவ்வாறுசெயின்
வாணனையோடுனைச்சேர்ந்தின்பமீகுவன்மானவளே. (௯௫)

மானேயென்னோடுசத்தியமாய்ச்சொன்னவாசகமாந்
தேனைமறந்தின்றுதேங்கவைத்தாயதுதீங்கல்வோ
வானோர்புதுவைநற்காளத்திநாதர்வனாயணங்கே
நானேவலியவந்துன்குறைதீர்ப்பனறுங்கிளியே. (௯௬)

கிளியென்றுசொல்லியகாதலனேயென்றுகேட்டிடுதி
எளியவளாகியயான்செய்தகுற்றமென்னேந்திழைபார்
பளியாப்பலசொலநின்னுரையாலுடைப்பாலனமுந்
தளியுனையேநினைந்தல்லும்பகலுந்தவிக்கின்றனே. (௯௭)

தவிக்கின்றகாரணமேதோயான்செய்நிந்தாட்சியென்னோ
புவிக்குட்சிறந்திடுகாளத்திநாதர்புதுவைவெற்பிற்
சவிக்கின்றமாமுலைமாதேமறக்கிலன்சாற்றுமென்னைக்
கவிக்கின்றமாமயல்தீரமருந்தொன்றுகாட்டுவையே. (௯௮)

காட்டமருந்திதுகாலமன்றேயென்றன்காதலனைக்
கூட்டிடப்பின்புனைக்கூடுவதற்கொருகுற்றமில்லை
நாட்டும்புகழ்புதுவாபுரிகாளத்திநாதர்வெற்பிற்
பாட்டுக்கிறையவனேமறவேனுனைப்பலதினமே. (௯௯)

மறந்தனையான்சொன்னவாசகந்தன்னைமதர்விழியாய்
அறந்தழைக்கும்புதுவாபுரிக்காளத்தியப்பன்வெற்பில்
உறந்தருநம்மிருவோருயிரொன்றுமுடலிரண்டாய்த்
திறந்தரநின்றதைநோக்கிளவலொவர்தேன்மொழியே. (௱)

தேன்மொழியேசிற்றுச்சொன்னநற்புத்தியைத்தேறுகிலாய்
போமொழியெங்கினும்போவதுசெய்தனைபோதவுமே
நீமதமாகியேயின்னமுஞ்செய்சநினைகுவைசேல்
தாமதமின்றிக்கொடுந்திங்கடைகுவைசாற்றினனே. (௱௧)

சாற்றினனின்மேலுளவன்பிறலிதைத்தார்குழலே
போற்றுவைநீயுமென்பாலன்பிலையெனிற்போதனன்காம்
ஆற்றலுறும்புதுவாபுரிக்காளத்தியப்பன்வெற்பில்
தூற்றினையாயினின்மேலுறுமன்புதெலைவுறுமே, (௱௨)

முற்றிற்று.